தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, SEPTEMBER 5 2024
வியாழக்கிழமை செப்டெம்பர் 05, 2024 | ஒளி: 10 கதிர்: 044 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE




## “சாதாரண கடவுச்சீட்டை வழங்க வேண்டும்”

கடவுச்சீட்டு வழங்குவதில் காணப்படுகின்ற பிரச்சினை பாரிய சிக்கலாக மாறியிருக்கின்றது.

தொடர்ச்சி P2

# சுரேகா ராஜா படுகொலை: யூசுபுக்கு தூக்கு



“அவர் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபித்துள்ளது

கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரைக் கடத்திச் சென்று காரில் கழுத்தை நெரித்து கொலை செய்து 3 1/2 கோடி பெறுமதியான ரொக்கம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்தார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்த ஒருவரைக் குற்றவாளியாக இனங்கண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே, அவருக்கு புதன்கிழமை (04) தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட, தங்க நகை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த கோடீஸ்வர வர்த்தகரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் எனப்படும் சுரேகா ராஜா, 12 வருடங்களுக்கு முன்னர் காரில் ஏற்றிச்சென்று கழுத்தை நெரித்துக் கொலை செய்து, கொள்ளையடித்துச் சென்றதாக வழக்குத் தொடுநரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லிஷான் ரத்நாயக்க நிரூபித்துள்ளார்.

மரண தண்டனைக்கு மேலதிகமாக, குற்றவாளிக்கு 10 வருடக் கடூழிய சிறைத்தண்டனையும், 10,000 ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2

## “புதிய ஜனாதிபதிக்கு
# ஒரு பாடமாக அமையும்”




எஸ்.ஆர்.லெம்பேட்

சிதறிக் கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும் என தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் ரெலோ அலுவலகத்தில் புதன்கிழமை(4) இடம் பெற்ற மக்கள் சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏமாற்றங்களின் விளைவாகவும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்குத் தயார் இல்லை என்பதைக் காட்டுவதற்கான ஒரு களமாக இத்தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலைப்பாடு மக்கள் மத்தியில் இருக்கிறது. இதன் காரணமாக இத்தேர்தலில் என்னைக் களம் இறங்கியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “ரணில்–சஜித் இணையவேண்டும்”



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பியும் இராஜாங்க அமைச்சருமான அருந்திக பெர்னாண்டோ, தான் சுயாதீன எம்.பியாக செயற்படப் போவதாகவும் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## “தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது”



நாட்டின் அனைத்து ஊடக நிறுவனங்களும் தேர்தல் சட்டத்திற்கு அமைவாக நடுநிலையுடன் செயற்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில ஊடக நிறுவனங்கள் சில எதிர்பார்ப்புகளை ஊக்குவிப்பதாக ஆணைக்குழுவுக்குத் தொடர்ந்து முறைப்பாடு கிடைக்கிறது என அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.பி.ரத்நாயக்க கூறுகிறார்.

இது தொடர்பில் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அறிவுறுத்தல்களின்படி,

தொடர்ச்சி P2

## “அடுத்த சபை அமர்வில் அரசு பக்கம் அமர்வோம்”



ஒக்டோபர் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது, ஐக்கிய மக்கள் சக்தி அரசுப் பக்கத்தில் அமரும். எனவே, யாரும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்து தமது வாக்கினை வீணாக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

தொடர்ச்சி P2

## ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை சூடுபிடிப்பு



ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கு இன்னும் 17 நாட்களுக்கு இருக்கின்ற நிலையில், தேர்தல் பரப்புரை சூடுபிடித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நான்கு பிரதான முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரதிநிதிகளை, காலிமுகத்திடலில், புதன்கிழமை (04) சந்தித்தார்.
ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம். அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தலைமையில், மன்னாரில், செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்றது.
தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம். அதன் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க தலைமையில், எல்பிட்டியவில், செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

## நான்கு சங்கங்கள் ஜனாதிபதிக்கே ஆதரவு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக இலங்கையின் நான்கு பிரதான முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ரிஷாட் அணியில் ஒருவர் ஜனாதிபதிக்கு ஆதரவு




ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செய்னுல் ஆப்தீன் எஹியா உட்பட பல உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## “கடவுச்சீட்டு வரிசைக்கு மாதத்துக்குள் தீர்வு”

எரிபொருள், எரிவாயு வரிசையை இல்லாமலாக்கிய எங்களுக்கு கடவுச்சீட்டு வரிசையை முடிவுக்குக் கொண்டுவருவது பெரிய விடயம் அல்ல. ஒரு மாத காலத்துக்குள் தீர்வு காண்போம் என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “ஜனாதிபதித் தேர்தலில் தலையிட மாட்டோம்”

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை நெருங்கிக்கொண்டிருக்கின்ற தருணத்தில், ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற ரஷ்யாவின் நிலைப்பாட்டை இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ்.ட்ஜகார்யன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## வடக்கு, கிழக்கின்
## அபிவிருத்திக்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாடு



தான் ஜனாதிபதியான உடனே வட கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு, யுத்தத்தின் பின்னரான பாரிய அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டி, வடக்கையும் கிழக்கையும் மையமாகக் கொண்ட பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம். ஏனைய மாகாணங்களுக்கும் அதன் பிரதிபலன் செல்லக்கூடிய வகையில்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சுரேகா ராஜா படுகொலை: யூசுபுக்கு தூக்கு

முகமது யூசுப் பாஸ்வீன் என்ற 41 வயதுடைய குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சுரேகா ராஜா என்றழைக்கப்படும் கோடீஸ்வர வர்த்தகரான சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்பவரை 2012 அக்டோபர் 30 அன்று புஸ்ஸல்லாவ பகுதிக்கு காரில் அழைத்துச் சென்று கழுத்தை நெரித்து, இறந்தவரின் பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்ததாகப் பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட நீண்ட விசாரணையில், குற்றவாளி இறந்தவரை ஏமாற்றிக் கண்டி புஸ்ஸல்லாவ பகுதிக்கு இறந்தவரின் காரில் அழைத்துச் சென்று காரில் கழுத்தை நெரித்து சடலத்தை வாகனத்திலிருந்து வெளியே இழுத்து விட்டு காருடன் தப்பிச் சென்றது தெரியவந்தது.

சின்னத்துரை இந்திரேஸ்வரன் என்றழைக்கப்படும் சுரேகா ராஜாவை கொலை செய்த பின்னர், குற்றம் சாட்டப்பட்ட கோடீஸ்வர வர்த்தகர், படுகொலைச் செய்யப்பட்டவரிடம் இருந்து 1,000 ரூபாயையும் கொள்ளையடித்துள்ளார்.

நீண்ட விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்டவர் வேண்டுமென்றே இந்தக் குற்றத்தைச் செய்துள்ளார் என்றும் அவர் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பு நிரூபித்துள்ளது என தெரிவித்த நீதிபதி, குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# ஒரு பாடமாக அமையும்

இணைந்த வட கிழக்கில் இருக்கின்ற மக்கள் அதி கூடிய வாக்குகளை அளிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாங்கள் ஏமாற்றப் பட்டுள்ளோம் என்பதனை காட்டுகின்ற போது நாங்கள் போராடிய ஒரு இனம். தொடர்ச்சியாகச் சுதந்திரம் அற்று இருக்கின்றோம் என்ற விடையத்தின் ஊடாக ஒரு தீர்வு கிடைக்க வேண்டும்.

ஓர் அடையாளத்திற்காக வே நான் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றேன். நீங்கள் சங்கு சின்னத்துக்கு வழங்கும் வாக்கு உங்களுக்கானது. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து, ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் ஒரு நோக்காக இதனை அனைவரும் பார்க்க வேண்டும்.

யாரோ ஒருவர் ஜனாதிபதியாக வெற்றி பெறுவார். யாராகவும் இருக்கலாம்.

இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும். எங்களைத் தலைவர்கள் ஏமாற்ற இருந்தாலும் மக்களாகிய நாங்கள் தயார் இல்லை என்பதைக் காட்ட வேண்டும்.

எங்களுடன் 7 தமிழ் கட்சிகள் இணைந்துள்ளது. எனினும், இலங்கை தமிழரசு கட்சி அதில் இணையவில்லை.இலங்கை தமிழரசுக் கட்சியில் இருக்கும் ஒரு சிலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கக் கூடாது என்கிற முடிவை எடுத்துள்ளார்கள்.அது அவர்களின் உரிமை என தெரிவித்தார்.

# “சாதாரண கடவுச்சீட்டை வழங்க வேண்டும்”

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரை 83,000 கடவுச் சீட்டுக்கள் விநியோகி க்கப்பட்டிருக்கின்றன. 2024 ஆம் ஆண்டு மாதம் ஒன்றுக்கு 60,000 கடவுச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது விநியோகிக்கப்படுகின்ற சாதாரண கடவுச்சீட்டுக்குப் பதிலாக எலக்ட்ரோனிக் கடவுச்சீட்டு வழங்க மேற்கொண்ட முயற்சியின் செயற்பாடு தோல்வியில் முடிவடைந்து இருக்கிறது. இந்த முறையை அறிமுகப்படுத்தும் வரை மக்களுக்கு சாதாரண கடவுச்சீட்டை வழங்க வேண்டும். என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,இலக்ட்ரோனிக் கடவுச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தும் வரை அரசாங்கம் கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்க வேண்டும். இதுவரை நாளொன்றுக்கு 2000 கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்க வேண்டி இருந்த போதும், 900 கடவுச்சீட்டுக்களே விநியோகிக்கப்படுகின்றன . இதனால் நீண்ட வரிசை ஏற்பட்டு பாரிய சிக்கல் நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது

மேலும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் காணப்படுகின்ற கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கை 30 000 வரை குறைந்திருக்கின்றது. ஈ-கடவுச்சீட்டு விநியோகத்தில் கொள்வனவு நடைமுறை எதனையும் பின்பற்றவில்லை. தகுதி இல்லாத நிறுவனங்களுக்கு அவற்றை வழங்கி இருப்பதனால், இந்த செயற்பாட்டை முன்னெடுக்க முடியாதுள்ளது. இதற்காக சாதாரண விலை மனுக் குரல் இடம் பெற்றிருக்க வேண்டும். அதையும் முறையாகச் செய்யவில்லை

சாதாரண கடவுச்சீட்டுகளை அச்சிடும் நிறுவனங்களுக்கு அதனை அச்சிடுவதற்கான போதுமான தொ கைகள் வழங்கப்படவில்லை. கடவுச்சீட்டுக்களுக்கான கேள்விகள் என்ன என்பது குறித்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு தெரியாதா என்கின்ற ஒரு சிக்கலும் ஏற்படுகின்றது. அது குறித்து பிரச்சினைகள் இல்லை என்பதால் மாதத்துக்கு 1.1 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது. எனவே இந்த சிக்கலுக்கு விரைவான தீர்வு பெற வேண்டும்.

அத்தோடு ஜனாதிபதியின் தலைமையிலான அமைச்சரவை இந்த ஈ -கடவுச்சீட்டு வேலைத்திட்டத்தில் எந்த ஒரு கொள்முதல் நடைமுறையும் இல்லாமல் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கி இருக்கின்றது. அதனால் இந்த பிரச்சினை தற்பொழுது உக்கிர மடைந்திரு க்கிறது. இவ்வாறான அவசர நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மாற்றுத் திட்டம் இருக்க வேண்டும். அரசாங்கத்திடம் அவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை. இந்த வரிசை ஏற்பட்டமைக்கு ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவையே பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

# ரிஷாட் அணியில் ஒருவர் ஜனாதிபதிக்கு ஆதரவு

கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் ஜனாதிபதியை புதன்கிழமை (04) சந்தித்து, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்குப் பூரண ஆதரவை வழங்குவதாக தெரிவித்தனர்

# “ரணில்–சஜித் இணையவேண்டும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். ,

ஜனாதிபதியாக எவர் பதவியேற்றாலும் அவரால் பாராளுமன்றம் கலைக்கப்படலாம். ஜனநாயகத்தின் சாவு மணி மற்றும் ஜனநாயகத்தின் அழிவு இதுவாகவும் இருக்கலாம் என்றும் கருதுகின்றோம். நாட்டை சீரழித்த குழுவே சகல மக்களின் மூளைகளையும் கழுவி, 75 வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் எதனையும் செய்யவில்லை என கூறி நாட்டை அழிவை நோக்கிக் கொண்டு செல்வதைப் போன்றே நான் கருதுகின்றேன் என்றார்.

# “கடவுச்சீட்டு வரிசைக்கு மாதத்துக்குள் தீர்வு”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் கடவுச்சீட்டு விநியோக நடவடிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகம் மாதமாகியுள்ளது. அதேபோன்று இலத்திரனியல் கடவுச்சீட்டு அல்லாத சாதாரண கடவுச்சீட்டு போதுமான தொகை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கையிருப்பில் இல்லாமல் போனதாலே இந்த பிரச்சினை தலைதூக்கக் காரணம். மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரிங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

அத்துடன் இந்த கடவுச்சீட்டு பிரச்சினைக்குத் தீர்வாக இலத்திரனியல் கடவுச்சீட்டு நடவடிக்கையை முன்னெடுக்கும்வரை 7இலட்சம் சாதாரண கடவுச்சீட்டுகளை விரைவாக அச்சிட்டு, விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஒரு மாத காலத்துக்குள் இந்த நிலை சாதாரண நிலைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம். அத்துடன், எரிபொருள், எரிவாயு வரிசையை இல்லாமலாக்கிய எங்களுக்கு கடவுச்சீட்டு வரிசையை முடிவுக்குக் கொண்டு வருவது பெரிய விடயம் அல்ல என்றார்.

# “தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது”

செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

அந்த நிறுவனங்களுக்குத் தேர்தல் ஆணையம் வெளியிடும் அறிவிப்புகள் அப்பப்படாது என்றும், அவ்வாறான நிறுவனங்களுக்குத் தேர்தல் முடிவுகள் வழங்கப்படாது என்றும் அவர் கூறியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

# “அடுத்த சபை அமர்வில் அரசு பக்கம் அமர்வோம்”

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் பாடம் கற்பிக்க மக்கள் தயாராகவுள்ளார்கள்.

மக்களைத் தவறாக வழிநடத்தி அதிகாரத்தைக் கைப்பற்ற நாங்கள் இடமளிக்க மாட்டோம். மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது ஐக்கிய மக்கள் சக்தி அரசுப் பக்கத்தில் அமரும். எனவே, யாரும் ரணில் விக்ரமசிங்கவுக்கு வாக்களித்து தமது வாக்கினை வீணாக்க வேண்டாம்.

மக்கள் விடுதலை முன்னணியினர் வைராக்கியத்துடன், அரசியல் செய்கிறார்கள்.இவர்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் நாடு மரணித்து விடும் என்றார்.

# நான்கு சங்கங்கள் ஜனாதிபதிக்கே ஆதரவு

அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம், தேசிய Taxi app முச்சக்கரவண்டி தொழிற்துறை சங்கம், ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை வல்லுநர்கள் சங்கம், மேல் மாகாண முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் என்பன ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்துள்ளன.

முச்சக்கரவண்டி சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் இன்று (04) காலை கொழும்பு காலிமுகத்திடல் போராட்ட பூமியில் ஒன்றுகூடியதுடன், தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்திக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை அடுத்து அந்த இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடந்த 25 வருடங்களாக நான்கு நிறைவேற்று ஜனாதிபதிகளின் கீழ் தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான பிரச்சினைக்கு 24

**“ தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான பிரச்சினைக்கு 24 மணித்தியாலங்களில் தீர்வை வழங்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்தனர்**

மணித்தியாலங்களில் தீர்வை வழங்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்த முச்சக்கரவண்டி சாரதிகள், கடந்த காலத்தில் தங்களின் தொழில்களை மேற்கொள்ள முடியாமல் பல நாட்களாக எரிபொருள் வரிசையில் தவித்ததாகவும் அந்த நிலையில் இருந்து ஜனாதிபதியே தங்களை மீட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமைக்கு முகம் கொடுக்க தாம் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 2025ஆம் ஆண்டு முதல் முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

# “கொல்வதற்கு சதி”

என்னைக் கொல்வதற்கு அல்லது சிறையில் அடைப்பதற்கு சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனது உயிருக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் ரணில் விக்ரமசிங்கவே அதற்குப் பொறுப்பு என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (04) விசேட கூற்றை முன்வைத்து இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவும் அஸ்லம் என்ற நபரும் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று, 5 வருடங்களாகக் குற்றச் செயல் ஒன்றுக்காக சந்தேக நபராக இருக்கும் ஒருவரை சந்தித்துள்ளனர். இவ்வாறு குறித்த சந்தேக நபரிடம், அவரை பிணையில் வெளியில் எடுப்பதாகவும் இன்னும் பல்வேறு சலுகைகளை வழங்குவதாகவும் தெரிவித்து, எனக்கு எதிராக வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு கோரியுள்ளனர்.

அதாவது சந்தேகத்தின் பேரில் 5 வருடங்கள் சிறையில் இருக்கும் குறித்த நபரின் குற்றச்செயலுக்கும், எனக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்தே இந்த வாக்குமூலத்தை அவர்கள் கோரியுள்ளனர். மனுஷ நாணயக்கார குறித்த சந்தேக நபரை சந்தித்தமைக்கான ஆதாரம் என்னிடம் உள்ளது.

சஜித்தின் வெற்றிக்காக நான் தீவிரமாகச் செயற்பட்டு வருபவன் என்பது அனைவருக்கும் தெரியும். இதனைத் தாங்கிக்கொள்ள முடியாமல், என்னை எப்படியாவது கொல்வதற்கு அல்லது ஏதாவது ஒரு பிரச்சினைக்குள் சிக்கவைத்து, என்னை சிறையில் அடைப்பதற்கு சதித்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பது எனக்குப் புலனாகிறது. இந்த விடயங்கள் தொடர்பில் போதுமான ஆதாரங்களை வைத்துக்கொண்டே இதனைத் தெரிவிக்கிறேன். இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்து, இந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவுள்ளேன்.

எனது உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு ரணிலே பொறுப்புக் கூறவேண்டும் என்பதை நான் இந்த சபையில் பகிரங்கமாகத் தெரிவிக்கிறேன்.

ரணில் போன்ற ஒருவரை இந்த நாட்டின் தலைவராக்க ஐக்கிய தேசிய கட்சிக்கு எமது வாழ்க்கையை அர்ப்பணித்து 15 வருடங்களாக பணியாற்றியமைக்காக நான் வெட்கப்படுகிறேன். அதேநேரம் மனுஷ நாணயக்கார பாரிய மோசடிக்காரர். அவர் 21ஆம் திகதிக்குப் பின்னர் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்படுவார். ஏனெனில், அரபு நாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண் தொழிலுக்கு செல்லும் பெண்கள் ஒவ்வொருவரிடம் இருந்தும் 75ஆயிரம் ரூபா பெற்றுக்கொண்டுள்ளார். என்றார்.

# “ஜனாதிபதித் தேர்தலில் தலையிட மாட்டோம்”




நாங்கள் நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை, நாங்கள் உங்களுக்கு விரிவுரை செய்வதில்லை, இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என தீர்மானிப்பது உங்கள் மக்களை பொறுத்த விடயம் என ரஷ்யத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

“நாங்கள் உங்கள் தெரிவை மதிப்போம் நீங்கள் தெரிவு செய்யும் எந்த ஜனாதிபதியுடனும் இணைந்து பணியாற்றுவோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அபிவிருத்திக்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாடு

அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மன்னாரில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சனத் தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2022ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பின் ஊடாக, அந்தந்த மாகாணங்களில் தேசிய உற்பத்திக்காக அவர்கள் வழங்குகின்ற பங்களிப்பையும் கணக்கிட்டு இருக்கின்றார்கள். அதில் 43.4% மேல் மாகாணத்தில் கிடைக்கின்றது.

வட மாகாணத்தின் பங்களிப்பு 4.1. வீதமாகவும், கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு 5.2 வீதமாகவும் காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக இந்த பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தரவுகளையும் தகவல்களையும் மையமாகக் கொண்டு முழு நாட்டையும் அபிவிருத்தியின் பால் விட்டுச் செல்வோம்.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படுவதோடு, இளைஞர்களுக்காகவும் விசேடமான வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம் அத்துடன், மன்னாருக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும். சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி தொழிற்துறை உருவாக்கி பலமிக்க அபிவிருத்தியைக் கொண்டு வர முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.



# ஆரம்பமானது...

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு, புதன்கிழமை (04) ஆரம்பமானது.

இந்த தபால் மூல வாக்கெடுப்பானது, செப்டெம்பர் 5 மற்றும் 6ஆம் திகதிகளிலும் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், தபால் மூல வாக்குப்பதிவு இடம்பெறும் தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு, செப்டெம்பர் 11,12ஆம் திகதிகளில் மேலதிக நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்குப்பதிவுக்காக சுமார் 700,000 அரச ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சஜித் ஆட்சியில்

# “தண்டனை வழங்க தயங்கோம்”

## மன்னார் பொதுக்கூட்டத்தில் ரிஷாட்

மதுபானசாலை ‘லைசன்ஸ்களுக்காக’ ரணிலை ஆதரித்தோர், ரகசியமாக மதுபான ‘கோட்டாக்களை’ பெற்றுக்கொண்டோரின் விபரங்கள், எதிர்வரும் சஜித் பிரேமதாசவின் ஆட்சியில் பகிரங்கப்படுத்தப்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, செவ்வாய்க்கிழமை (03) மன்னாரில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கோட்டாபய ராஜபக்ஷவின் இனவாத ஆட்சியால், நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தது. சிங்களப் பெரும்பான்மை வாக்குகளாலேயே, ஆட்சிக்கு வந்ததாக மமதையுடன் நடந்துகொண்டார் கோட்டா. மதங்களைப் புண்படுத்துமளவுக்கு அவரது மனநிலை இறுமாப்படைந்தது. கொரோனாவில் மரணித்த முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களை நல்லடக்கம் செய்யவிடாமல் தீயில் எரித்தார். இந்த அராஜகத்துக்கு உடந்தையாக இருந்த அமைச்சர்கள், எம்.பிக்களே இன்று ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளனர்.

நாங்கள் செய்தவற்றை நிறுத்துவதற்கென்றே, இங்கு ஒரு இராஜாங்க அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்டுக்கரைக்குளம், வியாயடிக்குளம், நெடுங்கண்டல் குளம் மற்றும் அஹத்திக்குளம் போன்ற விவசாயக் குளங்களைப் புனரமைத்து, இருபோக



நெற்செய்கைக்கு வாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

இங்கே வெள்ளமாகத் திரண்டுள்ள மக்கள் பணத்துக்காகவோ, சாப்பாட்டுப் பார்சல்களுக்காவோ சேர்த்த கூட்டமல்ல. சஜித் பிரேமதாசவை வெல்லவைக்கும் ஒரே வேட்கையோடு சேர்ந்த கூட்டம். சஜித்தின் வெற்றிக்காக அமோக ஆதரவளித்த பெருமையில் முதலிடம் பிடிக்க, மன்னார் மாவட்ட மக்கள் முந்திக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு பாலம் அமைத்து வர்த்தகத்தை விரிவுபடுத்தவும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் சஜித் பிரேமதாசவை வெற்றிபெறச் செய்வோம்” என்றார்.



# லிந்துலையில் ஆர்ப்பாட்டம்

■ துவாரகஷான்

நுவரெலியா பிராந்திய சுகாதார பணிமனை பிரிவுக்குட்பட்ட லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு பின்புறத்தில் பாரிய மண் மேட்டில் இருந்து கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளதால், இங்கு சிகிச்சைக்காக வரும் பொது மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர்.

தற்போது கட்டிடத் தொகுதியும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக இங்குப் பொதுமக்களுக்குச் சிகிச்சை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு இயற்கை அனர்த்த மத்திய நிலையத்தின் ஊடாக மண்சரிவு அபாயம் அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும், இதுவரை இந்த வைத்தியசாலை பாதுகாப்பு தொடர்பாக அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்தவில்லை. இதனால், இங்கு வரும் நோயாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரி, 100 க்கும் மேற்பட்ட மக்கள் புதன்கிழமை (04) காலை 10, மணி முதல் 11.30 மணி வரை குழந்தைகளை வைத்துக்கொண்டு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# “1/3 சிறுவர்களுக்கு மந்தபோசனம்”

நாட்டில் மூன்றில் ஒரு வீத சிறுவர்கள் மந்தபோசனைக்கான அறிகுறிகளை கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ரோஹினி கவிரட்ன தெரிவித்தார்.

இலங்கையில் சிறுவர் மந்த போசனை நிலைமை அதிகரித்துச் செல்கின்றதா என ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்ற விசேட செயற்குழுவின் அறிக்கையை அந்தக் குழுவின் தலைவரான இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் சார்பாக புதன்கிழமை (04) சபையில் முன்வைத்தே ரோஹினி கவிரட்ன எம்.பி.இதனை குறிப்பிட்டார்.

2023ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் ஐந்து வயதுக்கும் குறைவான பிள்ளைகளில் 96.5 வீதமானவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில், வயதுக்கு ஏற்ற எடையின்றி குறைந்த எடை உள்ள 17.1 வீதமான பிள்ளைகளும், உயரத்திற்கு ஏற்ற எடை குறைவான 10 வீதமான பிள்ளைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையைச் சாதாரணமான அறிக்கையாகக் கருதிவிட வேண்டாம். இது எமது நாட்டில் மூன்றில் ஒரு பிள்ளை மந்தபோசனை அறிகுறிகளுடன் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு உணவு பாதுகாப்பு இல்லாமையே காரணமாக இருக்கின்றது. அவர்களுக்கு போசனையுள்ள உணவுகள் கிடைக்கவில்லை. பொருளாதார நெருக்கடியால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்திலேயே மந்த போசனை நிலைமையை அதிகமாக இருக்கின்றது. மந்த போசனை இருக்குமாக இருந்தால் அந்த நாட்டால் முன்னோக்கிச் செல்ல முடியாது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இது தொடர்பில் உள்ள வேலைத்திட்டங்களை தமது கொள்கைப் பிரகடனங்களில் உள்ளடக்க வேண்டும் என்றார்.

# அரச உத்தியோகத்தர் ஐஸுடன் கைது



■ பாறுக் ஷிஹான்

அம்பாறையில் நீண்ட நாட்களாக சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் வைத்து விநியோகம் செய்து வந்தவர் சாய்ந்தமருது பிரதான வீதியில் வைத்து செவ்வாய்க்கிழமை (3) கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பகுதியில் உள்ள கல்வி திணைக்களத்தில் பணிபுரிந்து வரும் 43 வயது மதிக்கத்தக்கவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் நான்கரை இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 25 கிராம் ஐஸ் மிகவும் சூட்சுமமாகக் கடத்தி வரப்பட்டுள்ள நிலையில், மோட்டார் சைக்கிளுடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சான்றுப் பொருட்களுடன் சந்தேகநபரை சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கு எதிராக

# 16 தேர்தல் வன்செயல்கள்

2024 ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடையதாகக் கடந்த 27ஆம் திகதி தொடக்கம் இற்றவைரையான காலப்பகுதிக்குள் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக 16 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவை மத்தியில் கட்சி ஆதரவாளர்களைத் தாக்கி காயப்படுத்தியமை, தேர்தல் அலுவலகங்களுக்குத் தீவைத்தமை உள்ளிட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேதப்படுத்தியமை என்பவை உள்ளடங்குகின்றன.

மினுவங்கொட, பமுணுகெதர, தஹய்கமுவ, மொணறாகல-வெலியாய, சியம்பலாண்டுவ, லியன்கொல்ல, மீரிகம, னுவங்கொட, பரகடுவ, வசம்பிட்டிய, பொல்கஹவெல பிற்றவல, ரம்புக்கன, ஹாரிஸ்பத்துவ பொக்காவல, புத்தளம், பொல்லெபெத்த போன்ற இடங்களில் தேர்தல் வன்செயல்கள் இடம்பெற்றுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி அகலங்க உக்வத்த தெரிவித்துள்ளார்.

# விபத்தில் முதியவர் காயம்



■ பு.கஜிந்தன்

யாழ். வட்டுக்கோட்டை சந்தியில் இருந்து சித்தங்கேணி பகுதியில், புதன்கிழமை(09) காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, குறித்த இடத்தில் வலது பக்கத்தில் உள்ள கிளை வீதிக்குத் திரும்ப முற்பட்ட வேளை, அதே திசையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிளின் சாரதியும், அவருக்குப் பின்னால் அமர்ந்திருந்து தலைக்கவசம் இன்றி பயணித்த முதியவரும் காயமடைந்துள்ளனர்.

முதியவர் சம்பவ இடத்தில் மயக்கமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோர விபத்தில் 15 வயது சிறுமி மரணம்

பிபில - மொனராகல வீதியில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்த பாடசாலை மாணவிகள் இருவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று குறித்த இரு மாணவிகளும் பயிற்சி வகுப்பிற்குச் சென்று மாலை 5 மணியளவில் பிபில- மொனராகலை வீதியில் உள்ள கடைக்கு முன்பாக வீதியோரத்தில் நின்று கொண்டிருந்தவேளை, அப் பகுதியில் பயணித்த கார் வேகத்தை கட்டுப்பட்டையிழந்து இரு மாணவிகளின் மீது மோதியுள்ளது.

படுகாயமடைந்த இரு மாணவிகளும் பிபில ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டநிலையில், கவலைக்கிடமான நிலையில் இருந்த துலாஷி கெஷாலா என்ற 15 வயது மாணவி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# படகு விபத்தில் ஒருவர் மாயம்

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் இருந்து புதன்கிழமை(04) கடற்றொழிலுக்காக சென்ற இளைஞர்களின் படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பாதுகாப்பாகக் கரை சேர்ந்துள்ளதுடன், மற்றையவர் காணாமல் போயுள்ளார்.

அவரை தேடும் நடவடிக்கைகளில் கடற்படையினரும் மீனவர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.


## நிறுவனத்தின் பெயர் மாற்ற அறிவிப்பு

நிறுவனத்தின் பெயர் 2024.08.01 அன்று மாற்றப்பட்டது.

**நிறுவனத்தின் முந்தைய பெயர்:**
யுனிவெர்சல் வேவ்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**நிறுவனத்தின் எண்:**
PV 00209688

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
எண்.16/3, கண்டவலவட்டா, மிரிஸ்வட்டா சாலை, கஹதாபித்தியா, கனன்விலா.

**நிறுவனத்தின் புதிய பெயர்:**
டெக் ரொம்ச் (பிரைவட்) லிமிட்டட்

# பிறர் அன்பின் பணியாளர் அன்னை தெரசாவின் நினைவுதினம்

பிறந்தோம், வாழ்ந்தோம், மரணமடைந்தோம் என்றில்லாது, பல்வேறான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்து, உலகின் பல தரப்பட்ட மக்களின் கண்ணீருடன், இப்பூவுலகைவிட்டு விடைப்பெற்றுச் சென்றவர்தான் அன்னை தெரசா. அவரின் 27ஆவது நினைவுதினம் இன்றாகும்.

தென் கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியாவில் 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 பிறந்த இவர், 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் 5ஆம் திகதி இந்தியாவில் மரணமடைந்தார். அவரது 45 வருடங்கள், சமூக தொண்டு சேவைகளை நினைத்தால், வேறு எவருமே செய்யமாட்டார்கள். அதற்காக பல்வேறான சவால்களுக்கும் அத்தாய் முகங்கொடுத்திருந்தார்.

'அன்னை தெரசா' எனும் பெயரை 'அன்னை' எனும் சொல் இல்லாமல் யாரும் சொல்வதில்லை. அந்தளவுக்கு நம் மனதில் வாழும் அன்னை தெரசாவுக்கு புனிதராவார். சமூகப் பணியைத் தனது 12 வயதில் ஆரம்பப்பித்தா அவர், 18 வயதில்தான் முழுநேர சேவையில் ஈடுபட்டார்.

குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதைத் தவிர, அவர்களைக் குளிப்பாட்டி, சாப்பாடு ஊட்டினார். ஏழைகளைத் தேடிச் சென்று சேவைகள் செய்தார். மருத்துவத் துறைக்குத் தேவையான 'உற்சாகம்', 'ஆர்வம்', 'பொறுப்பு' ஆகிய மூன்று நற்குணங்களையும் தெளிவுறக் கற்றுக் கொண்டார். பசியால் வாடும், வீடின்றி தவிக்கும், மாற்றுத்திறனாளிகள், சமுதாயத்தால் புறக்கணிப்பட்டவர்களுக்கு உதவிகளைச் செய்தார். ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய, ஆதரவற்ற, குப்பையில் வீசப்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்தார்.


அவை மட்டுமன்றி, தொழுநோய், காசநோய், எஸ்.ஐ.வி. பாதித்தவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், அவர்களை மற்றவர்கள் புறக்கணிக்கக்கூடாது என்றும் விழிப்புணர்வு செய்தார். கைதிகளுக்கும், போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்.

சீல் வடிந்த நிலையில் இருக்கும் பல நோயாளிகளின் சீழைத் தானே சுத்தம் செய்து, மருத்துவம் செய்து பராமரித்தார். அதனைக் கண்ட பலரும் 'ச்சீ' என சொல்லியதும் உண்டு. பதிலுக்கு 'ச்சீ' என சொல்லி ஒதுங்கினால் காயம் குணமாகாது. அவர்களுக்குப் பணிவிடை செய்வது மட்டுமே தீர்வு என்பதையே பதிலாகக் கூறுவார்.

தினமும் அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு, தனது குழுவினருடன் வீதி,வீதியாக யாசகம் கேட்டுச் செல்வார். அப்படி ஒருமுறை சென்றபோது, ஒரு கடைக்காரரிடம் உதவி கேட்டார். அவர் தெரசாவை கண்டும் காணாமலும் இருந்தார். தெரசா மீண்டும் கை நீட்டி உதவி கேட்டார். கோபமுற்ற கடைக்காரர் மென்றுகொண்டிருந்த வெற்றிலை பாக்கினை, தெரசாவின் கையில் துப்பினார். சற்றும் பொறுமையை இலக்காத தெரசா, இது நீங்கள், எனக்கு கொடுத்தது. பசியில் வாடும் குழந்தைகளுக்கு எதாவது உதவி செய்யுங்கள் எனக் கூறியதும், அந்தக் கடைக்காரர் குறுகிப்போய் தன்னால் இயன்ற பண உதவிகளைச் செய்தார்.

இவ்வாறு பல்வேறான அவமானங்களுக்கு முகங்கொடுத்த அன்னை தெரசா தனது தொண்டு சேவைகளைக் கைவிடவில்லை அதனால்தான், மரணமடைந்த போது, உலகின் பல தரப்பட்ட மக்களும் கண்ணீர் சிந்தினர். அவ்வாறான அன்னைக்கு இன்று 05ஆம் திகதி பிறந்தநாளாகும்.




# இவர்களுக்கு தெரியாது விட்டாலும் மக்களுக்குத் தெரியும்.

முருகானந்தம் தவம்

நாம் இன்னொருவரை குற்றஞ்சாட்டுவதற்காக எமது கையின் ஆட்காட்டி விரலை அந்நபரை நோக்கி நீட்டும்போது, எமது ஒருகையில் உள்ள 5 விரல்களில் 3 விரல்கள் எம்மை நோக்கியே இருக்கும் என்பார்கள். அதாவது நாம் மற்றவர் மீது சுமத்தும் குற்றங்கள், தவறுகளை நாமும் செய்திருப்போம். ஆனால், அதை மறைத்து மற்றவர்களுக்கு விரல் நீட்டும்போது, எம்மையறியாமலே எமது பக்கமும் விரல்கள் திரும்பும் என்பதற்கே இதனை உதாரணமாக கூறுவார்கள். இவ்வாறான ஒரு நிலையிலேயே தற்போதைய பிரதான எதிர்க்கட்சியான ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது.

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அதில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களும் அவர்கள் சார் கட்சிகளும் பரஸ்பரம் எதிர் ஜனாதிபதி வேட்பாளர்களையும் அவர்களின் கட்சிகளையும் கடுமையாக விமர்சிப்பதும் குற்றம்சாட்டுவதும் பழிகள் போடுவதும் சேறு பூசுவதும் இந்நாட்டு அரசியல்கட்சிகளினதும் அரசியல்வாதிகளினதும் கலாசாரம். அதனைத்தான் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலிலும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பொதுஜன பெரமுன அரசின் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவே எதிர் வேட்பாளர்களினதும் எதிர்க்கட்சிகளினதும் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றார். அவர் மீது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது என்பதனால் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டவர்களுடன் அவர் கூட்டணி அமைத்துள்ளதாக எதிர் ஜனாதிபதி வேட்பாளர்களினாலும் எதிர்க்கட்சிகளினாலும் குறிப்பாகப் பிரதான போட்டி ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவினாலும் அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டாலும், கட்சியில் இருந்து எவரும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகாமல் வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்தது. ரணில் விக்ரமசிங்க கூட தோல்வியடைந்தார். ஆனால், கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மூலம் அவர் மட்டும் 2021ஆம் ஆண்டு ஜூன் 23ஆம் திகதி பாராளுமன்றம் வந்தார். இவ்வாறான நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்ததன் விளைவாக, மகிந்த ராஜபக்ஷ 2022 மே 9இல் தனது பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.இதனையடுத்து மக்கள் போராட்டத்தைச் சமாளிக்க 2022ஆம் ஆண்டு மே 12 திகதியன்று ரணில் விக்ரமசிங்கவை கோட்டாபய ராஜபக்ஷ பிரதமராக நியமித்தார்.

எனினும் 2022ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. கோட்டாபய தலைமறைவானார். இந்நிலையில், 2022ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் திகதி கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறி 14ஆம் திகதி தனது ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதை அடுத்து, பிரதமராகப் பதவியில் இருந்த ரணில் விக்ரமசிங்க ஜூலை 15ஆம் திகதி பதில் ஜனாதிபதியானார். 2022ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி, பாராளுமன்றத்தில் 225 எம்.பிக்களிடையில் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க 134 வாக்குகள் பெற்று 8ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அதிகாரப்பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வாறான நிலையில்தான் இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அதில் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கவிருந்த நிலையில் அவரை ஜனாதிபதியாக்கிய பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர்களான ராஜபக்ஷக்கள் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் போட்டியிட ஆதரவளிக்க மறுத்து விட்டார்கள். இதனையடுத்து, தனது கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியில் தான் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கினால் ஏனைய கட்சிகளினதும் எம்.பிக்களினதும் ஆதரவைப் பெற முடியாது என்பதை நன்குணர்ந்த ரணில் விக்ரமசிங்க சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ளதுடன் அனைத்துக் கட்சிகளினதும் எம். பிக்களினதும் ஆதரவைக் கோரினார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சீரழிந்த நாட்டை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற இரு வருடங்களுக்குள்

> "பெரும் ஊழல், மோசடிகளிலும் ஈடுபட்ட அமைச்சர்கள், எம்.பிக்களுடன் ரணில் விக்ரமசிங்க கூட்டு வைத்துள்ளதாகவும் இந்த மோசடிக் கும்பல் ஆட்சிக்கு வந்தால், நாடும் பொருளாதாரமும் மீண்டும் பேரழிவைச் சந்திக்குமெனவும் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர்

மீட்டவர் என்ற பெருமையையும் தகுதியையும் ரணில் விக்ரமசிங்க கொண்டிருந்ததனாலும், இன்னும் சில வருடங்களுக்கு அவர் நாட்டுக்குத் தேவையென்பதனாலும் பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த 102க்கும் மேற்பட்ட எம்.பிக்கள் கட்சித் தலைமையின் முடிவையும் மீறி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதுடன், பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எம்.பிக்கள் சிலரும் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ளதுடன், இன்னும் சில தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அதன் எம்.பிக்களும் அவருக்கு ஆதரவளிக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இவ்வாறாக ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவும் பலமும் அதிகரித்து வருகின்ற நிலையில்தான், நாட்டை சீரழித்த ராஜபக்ஷ குடும்ப ஆட்சியிலும் அவர்களின் கட்சியிலும் இருந்து நாட்டின் பொருளாதார சீரழிவுக்குக் காரணமாக இருந்ததுடன், பெரும் ஊழல், மோசடிகளிலும் ஈடுபட்ட அமைச்சர்கள், எம்.பிக்களுடன் ரணில் விக்ரமசிங்க கூட்டு வைத்துள்ளதாகவும் இந்த மோசடிக் கும்பல் ஆட்சிக்கு வந்தால், நாடும் பொருளாதாரமும் மீண்டும் பேரழிவைச் சந்திக்குமெனவும் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர். அதாவது, நாட்டை சீரழித்த பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், எம்.பிக்கள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றனர் என்பதே சஜித் பிரேமதாசாவினதும் அவரது கட்சியினதும் பிரசாரக் கருவாகவுள்ளது.

இந்த விடயத்தில்தான் சஜித் பிரேமதாசாவும் அவரது கட்சியும் ரணில் விக்ரமசிங்கவுக்கு குற்றம்சாட்டி விரலை நீட்டிக்கொண்டு தாமும் அதே குற்றத்தைச் செய்துகொண்டிருக்கின்றனர். பல இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட வாக்கு வங்கியைக் கொண்டிருந்த போதும் ரணில் விக்ரமசிங்க சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளராக கட்டுப்பணம் செலுத்திய பின்னர்தான் பொதுஜன பெரமுனவில் உள்ள 102க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவை தெரிவித்துக் கொண்டனர். ஆனால், அதற்கு முன்னரே பொதுஜன பெரமுனவில் அமைச்சர்களாகவும் எம்.பிக்களாகவும் இருந்தவர்களுடன் சஜித் பிரேமதாசவும் அவரது கட்சியினரும் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள்.

பொதுஜன பெரமுனவில் முக்கிய அமைச்சர்களாகவிருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகக் கொண்டுவருவதில் பெரும் பங்காற்றிய 'வியத்மக'வின் முக்கியஸ்தரும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர், அவருக்குத் தவறான ஆலோசனைகள், வழிகாட்டல்களை வழங்கி, நாட்டின் பொருளாதார பேரழிவுக்கு வித்திட்டவர்களில் முக்கியமானவருமான இராஜாங்க அமைச்சராகவிருந்த நாலக கொடஹேவா, சரித்த ஹேரத் மற்றும் வசந்த யாப்பா பண்டார, உபுல் கலப்பதி, குமாரசிறி, ஜகத்குமார போன்ற பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டும் தனது கட்சியில் இணைத்துக் கொண்டும்தான் சஜித் பிரேமதாசவும் அவரது கட்சியினரும் ரணில் விக்ரமசிங்க பொதுஜன பெரமுனவினருடன் கூட்டு வைத்துள்ளதாகக் குற்றம்சாட்டி விரல் நீட்டுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தோ ஐக்கிய மக்கள் கூட்டணியிலிருந்தோ விலகி, ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பவர்கள் எல்லாம் துரோகிகள், குப்பைகள் எனவும் பொதுஜன பெரமுனவிலிருந்து ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்பவர்கள் எல்லாம் ஊழல், மோசடிக்காரர்கள், நாட்டை அழித்தவர்கள் எனவும் கூறும் சஜித் பிரேமதாச தரப்பினர் பொதுஜன பெரமுனவிலிருந்து தமது கட்சிக்கு வருவோரைத் தியாகிகள், நாட்டுப்பற்றுள்ளவர்கள், ஊழல், மோசடிக்கு எதிரானவர்கள் என்று கூறி வெள்ளையடிப்பது எந்தளவுக்குக் கேவலமான, தரங்கெட்ட இரட்டை நிலைப்பாடு கொண்ட அரசியல் என்பது இவர்களுக்குத் தெரியாது விட்டாலும் மக்களுக்குத் தெரியும்.



## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்கு உரிய காரியங்களை மட்டும் செய்து, சமூகசேவைகள் எதையும் செய்யாதவர், ஆன்மிகம் பற்றிப் பேசுவதில் ஏதுபயன்?

நற்செயல் புரிந்தவர்கள் மௌனமாகிவிடுகின்றனர். ஆனால், எதுவுமே செய்யாதவர்கள், பொதுநலன் பற்றிப் பேசுவது வேடிக்கை. பொய்யான பிரசாரங்களை அள்ளி வீசுபவர்கள் சுயநலவாதிகள். இவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம்.

தேசத்துக்குத் தியாகம் செய்கின்றோம் என்று சொல்லியே தலைவராகி விடுகின்றவர்கள், சாதாரண தொழிலாளி செய்கின்ற பணிகளைக் கூடச் செய்கின்றார்களா?

கஷ்டப்பட்டே வாழ வேண்டும் என்ற விதி நிரந்தரமாகிவிடக்கூடாது. எனினும் இன்னமும் ஏழ்மை முடிவுக்கு வரவே இல்லை.

விலைவாசிகள் அதிகரிக்க இன்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சில பணக்காரர்கள், ஏழைகளுக்கு உதவி புரிந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. இவர்களைப் போன்றவர்கள் இரக்கம் செலுத்துவதில் உறுதியானவர்கள். சொல்லாமல் செய்வோர் நல்லோர்.

தொண்டு நிறுவனங்களுக்குப் பலவிதமான உதவிகளைச் சாதாரண மக்களும் நல்குகின்றனர். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்காமலிருந்தாலே போதும். அதுவே பெரிய உதவி.

பேராசையுடன் பொருட்களைத் தேடுபவர்கள், மற்றவர்களின் நிலைகளை உணரவேண்டும். எல்லோரும் வாழவேண்டும். வையகம் எமக்கானது மட்டுமல்ல, உணர்வார்களா?

நன்றி: பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கழிவு நீரால் பயணிகள் அசௌகரியம்

கிளிநொச்சி மாவட்டத்தின் மத்திய பேருந்து நிலையத்தில் மலசலக் கூடத்தின் கழிவு நீர் வெளியேறி பயணிகள் பயன்படுத்தும் வெளி இடங்களில் நிற்பதனால் பயணிகள் கடும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பேருந்து நிலையமானது, கடந்த 28.03.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது. மலசலக் கூடம், குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசலக் கூடத்தின் கழிவு நீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறிக் காணப்படுவதனாலும், மலசலக் கூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகிறது என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

- மு.தமிழ்ச்செல்வன்





இலவசக்கல்விக்கு

# மலர் வளையம்




காஞ்சனா தேவி கிருபாகர்
இலங்கை ஆசிரியர் சங்க
கண்டி மாவட்ட பிரதி செயலாளர்
ஆலோசகர், அறிவிப்பாளர்
(SLBC) (MPhil (Geo), BSc (uons) coun & Psy,
Dip in Pub Law PGD(Education),
PGD (Water Management)


(புதன்கிழமை (04) தொடர்ச்சி...)

FUTA( Federation of University Teachers Association) மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்கான ஒதுக்கீட்டினை 6 சதவீதமாக உயர்த்த வேண்டும் என போராடினாலும் இற்றைவரை அத்தொகையானது 1.2 தொடக்கம் 2 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவிற்கே வகை கூறுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன கொள்கை மற்றும் வரி அறவிடுதல் என்பவற்றின் மூலம் அதிகளவில் பாதிப்புக்கு உள்ளான மிக முக்கியமான துறையாகவும் இருப்பது கல்வியாகும். அரசின் சிக்கன கொள்கைகள் ஆசிரியர்களின் சம்பளம் வழங்காமை,புதிதாக ஆசிரியர்களை நியமனம் செய்யாமை (தற்போது 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன), மலிவான விலையில் ஆசிரிய நியமனங்களை வழங்குதல் (ஆசிரியர் உதவியாளர்களுக்கு சம்பளம் 10,000), அருகிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற செயற்பாட்டின் மூலம் 100 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக இருக்கும் ஆசிரியர்களிடம் மேலதிக சேவையினை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவர்களது இடமாற்றங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்,கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆரம்ப பிரிவிற்கான பயிற்றப்பட்ட ஆசிரியர்களை உயர் தரத்திற்காகப் பயன்படுத்துதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளினால் ஆசிரியர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்த அழுத்தங்கள் மாணவர்களின் கல்வியிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான சுமுகமான உறவுக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் அரசின் சிக்கன கொள்கைகள் அமைந்துள்ளன. பொருளாதார நெருக்கடிக்கேற்ப ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாமையினால் அவர்களது போராட்டங்களும் தொடர்கின்றன. பல கிலோமீட்டர்கள் அதிகஸ்ட பிரதேசத்திற்குப் பயணிக்கும் ஆசிரியர்கள் பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங் கொடுப்பதனால் தனியார் பாடசாலைகள் மற்றும் தனியார் வகுப்புகளில் தொழில் புரிவதற்குத் தள்ளப்படுகின்றனர். எனவே இலவசமாகப் பெற வேண்டிய கல்வியை மாணவர்கள் பணத்திற்குப் பெறும் நிலை உருவாகி உள்ளது.

கல்வித்துறையில் அதிகமாக ஆசிரியைகளே சேவையாற்றுவதனால் அவர்களின் சம்பளத்தில் தமக்குத் தேவையான உடைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதோடு அவற்றிற்கான தையல் கூலிகளும் அதிகரித்துள்ளன. எனவே தமது உடை தொடர்பான போராட்டங்களை அவர்கள் மற்றொரு வகையில் முன்னெடுக்கின்றனர். ஆசிரியர்களுக்கான மேற்பார்வை கொடுப்பனவுகள், மதிப்பீட்டுக் கொடுப்பனவுகளையும் அரசு உரிய காலத்தில் வழங்காமை என்பனவும் மறைமுகமாகக் கல்வியில் தாக்கம் செலுத்தி வருகின்றது.

பாடசாலைகளுக்கு அரசு வழங்கும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமையினால் பாடசாலையினை நடத்துவதற்காகப் பெற்றோர் மீது சுமைகள் திணிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசினால் மறைமுகமாகச் சுமத்தப்படும் இச்சுமைகளைப் பெற்றோர்கள் சுமக்க முடியாதவர்களாக இருப்பதோடு, கல்விக்கான தேவையுடைய பெற்றோர் தமது பிள்ளைகளுக்காகக் கடன் சுமையில் சிக்கி வருவதோடு, அதனையும் எதிர்கொள்ள முடியாதவர்கள் பாடசாலை கல்வியை நிறுத்தி வருவதையும் காண்கின்றோம்.

இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கனம் மற்றும் வரி கொள்கைகளினூடாக தென்னாசியாவில் சிறந்த கல்வித்தரத்தைக் கொண்டிருந்த இலங்கையின் கல்வி வறியவர்களுக்குக் கேள்விக்குறியாக இருப்பதோடு, செல்வந்தர்களுக்கு பல்துறைசார் கற்கைக்கு வழிவகுத்துள்ளது. திறமையான மாணவர்களின் வாழ்க்கை திசை மாறும் அபாயம் தோன்றியுள்ளது. மெது மெதுவாகத் தனியார் மயமாக்கலை நோக்கி நகர்வதற்கு வழிவகுக்கும் இலங்கையின் கல்விக் கொள்கைகள் இலவசக் கல்விக்கு மலர் வளையம் வைக்கும் நாள் வெகு விரைவில் இல்லை என்பது மட்டும் நிச்சயமானது. (முற்றும்)



# “பெறுவதைக் காட்டிலும், கொடுப்பது மேலானது”

(சர்வதேச தொண்டு தினம் இன்று)




பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி


“பெறுவதைக் காட்டிலும், கொடுப்பது மேலானது” என்பது ஒரு முதுமொழி. அன்னை தெரேசாவின் தியாகச் சிந்தனையைக் கருத்திற் கொண்டு, அவர் அமரத்துவம் அடைந்த செப்டெம்பர் 5ஆம் திகதியினை ஞாபகார்த்த நாளாகக் கருதி, 2012ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் எடுக்கப்பட்ட A/RES/67/105 தீர்மானப்படி, சர்வதேச தொண்டு தினம் 2013ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

ஐ.நா சபையில் அங்கத்துவம் வகிக்கும் 193 நாடுகளும் , இந்த தீர்மானத்தை ஏற்றுக் கொண்டன. 26ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1910ஆம் ஆண்டு அல்பேனியாவின் ஸ்கோப்ஜே கிராமத்தில் (தற்போதுள்ள வட மெசிடோனியக் குடியரசு) பிறந்த அன்னை தெரெசாவின் இயற் பெயர் ‘எக்னஸ் கோஞ்சா பொயாஜியூ’.

இந்தியாவில் உள்ள கல்கத்தா நகரில் காணப்பட்ட குழந்தைகள், கைவிடப்பட்டோர் மற்றும் தொழுநோயாளிகள் மீது அன்பு காட்டி, அவர்களுக்கு மருத்துவ சேவையாற்றி மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர்.

உலகம் முழுவதும் வாழ்ந்த நலிவுற்றவர்களுக்கான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கப் பல நாடுகளில் தனது அமைப்பின் கிளைகளை நிறுவியவர். 1979ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசினை அன்னை தெரேசா பெற்றார். 1980ஆம் அண்டு இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார்.

அமைதி மற்றும் உலகப் புரிந்துணர்வுக்கான மகசேசே விருது, காப்ரியேல் விருது, அமெரிக்காவின் மிக உயரிய விருதான சுதந்திரத்துக்கான அதிபர் பதக்கம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றார். இவர் அன்னை தெரேசா அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார். வாழ்ந்த போதே ஒரு மனிதருக்கு அஞ்சல் தலை வெளியிட்ட முதல் பெருமை ‘அன்னை தெரேசா’வுக்கு மட்டுமே உரியது.

தனது 18ஆவது வயதில் தொண்டுப் பணியைக் கல்கத்தாவில் ஆரம்பித்து, சுமார் 45 வருடங்களுக்கு மேலான தன்னலமற்ற தியாகத்துடன் கூடிய சேவையை மக்களுக்கு ஆற்றிய அன்னை தெரேசா, தனது 87ஆவது வயதினில், செப்டெம்பர் மாதம் ஐந்தாம் திகதி 1997ஆம் ஆண்டு மண்ணுலகை விட்டு விண்ணுலகம் நோக்கிச் சென்றார்.

2011 ஆம் ஆண்டு ஹங்கேரி பாராளுமன்றம் அன்னை தெரெசாவின் இறப்பு தினத்தைத் தேசிய விடுமுறையாக அறிவித்தது.

**வறுமையில் வாடிக் கொண்டிருப்பதுவும், மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உதவிகளை வழங்குவதுவும் அவசியம்**

இவரின் இறப்புக்குப் பின், 2016ஆம் ஆண்டு, திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால், அன்னை தெரேசா அவர்கள் முக்தி பேறு அடைந்தவராக அறிவித்து, கொல்கத்தாவின் ‘அருளாளர் தெரேசா’ என்ற பட்டமும் சூட்டப்பட்டது.

இவ்வாறு பட்டம் சூட்டப்பட்ட இத்தினத்தினை, அல்பேனியா தேசமானது பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியது.

வெள்ளம், போர், நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா. அமைப்பின் மூலம் பேருதவி செய்வதே இந்த தினத்தின் நோக்கமாகும்.

ஐ.நாவின் 2030ஆம் ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி நிரலின்படி, உலகில் வறுமையினை அழித்தல் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக உள்ளது.

உலகிலுள்ள வறுமையான மக்களின் பிரச்சினைகளை இனங் கண்டு, அவற்றைப் பரோபகார மக்களுடன் இணைந்து, தீர்க்கக் கூடிய வழிவகைகளையும் மேற்கொள்ள ஐ.நா. முயற்சிக்கின்றது.

இன்று உலக சனத்தொகையில் சுமார் அரை வாசி மக்கள் வறுமையால் வாடுகின்றனர். கிட்டத்தட்ட 2.50 அமெரிக்க டொலருக்குக் குறைவான வருமானத்தில் சுமார் மூன்று பில்லியன் மக்கள் வாழ்கின்றனர். ஒரு பில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகள் வறுமை நிலையில் உள்ளனர். ஒவ்வொரு நாளும் சுமார் 220,000 சிறார்கள் இறந்து கொண்டிருக்கின்றனர். வறிய மக்களின் இறப்புக்கு வறுமை மிக முக்கிய காரணியாக உள்ளது. குடிக்கின்ற நீர் இல்லாமல் மில்லியன் கணக்கான மக்கள் உலகில் கஷ்டப்படுகின்றனர்.



தவிர்க்கக்கூடிய நோய்களினால் பீடிக்கப்பட்டு அண்ணளவாக இரண்டு மில்லியன் சிறார்கள் இருக்கின்றார்கள். 25% மான மக்கள் மின்சாரம் இல்லாமல் வாழ்கின்றனர். இவற்றைத் தவிர இயற்கை அனர்த்தங்களான வெள்ளம், பூகம்பம். எரிமலை வெடிப்பு, பனி, காலநிலை மாற்றங்கள் போன்ற பல்வேறு காரணிகளாலும், மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்களான போர், திட்டமிடப்பட்ட அழிவுகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றாலும், பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் படி, உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து உணவுப் பொருட்களும் நுகரப்படுவதில்லை. அவ்வாறு நுகரப்படும் பட்சத்தில், அவை உலகிலுள்ள இரண்டு பில்லியனுக்கும் மேற்பட்ட மக்களால் நுகர்ச்சி செய்ய முடியும். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களில் 1/3 பங்கு வீணடிக்கப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 40 வீதமான உற்பத்தி பொருட்கள் உற்பத்தியின் பொழுதும், உற்பத்திக்குப் பிறகு மேற் கொள்ளப்படுகின்ற செய்முறைகளின் பொழுதும் வீணடிக்கப்படுகின்றன.

இந்த புள்ளி விபரங்களை நோக்குகின்ற பொழுது, உலகில் பெரும்பாலான மக்கள் இன்றும் வறுமையில் வாடிக் கொண்டிருப்பதுவும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகளை வழங்குவதுவும் அவசியம் என்ற நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படுகின்ற பொழுது மனித அவலத்தைக் குறைப்பதற்காகவும், மக்கள் படுகின்ற வேதனைகள், கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்யும் முகமாகவும், அன்னை தெரேசாவின் மக்கள் நலன் நோக்கிய பங்களிப்பினை அங்கீகரிக்கும் முகமாகவும், இது போல, தனிப்பட்ட நபர்களாலும், தொண்டு செய்யும் நிறுவனங்களாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்படும் உதவிகளை அங்கீகரிக்கும் முகமாகவும், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 5ஆம் திகதியன்று சர்வதேச தொண்டு தினத்தைக் கொண்டாடுகின்றது.

சமூக உறவினையும், சமுதாயத்தின் பலத்தையும், அதனது ஒற்றுமையையும் கொண்டு செல்வதில் மனிதர்களால் செய்யப்படுகின்ற தொண்டுகள், சேவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சுகாதாரம், கல்வி , வீட்டு வசதி, குழந்தை பாதுகாப்பு போன்ற இன்னொரன்ன தொண்டுகள், சேவைகள் மூலமாக மனித அவலங்களை, துயரங்களை இந்த உலகில் இருந்து களைய முடியும் என்பது நம்பிக்கை.

ஒரு சமுதாயத்தின் கலாசாரம், விஞ்ஞானம், விளையாட்டு போன்ற பல அம்சங்களையும் பேணிப் பாதுகாக்க உதவுகின்றது. நன்கொடைகள் வழங்கப்படுவது என்பது தொன்று தொட்டு எமது கலாசாரத்தில் காணப்படுகின்ற ஒரு எழுதப்படாத மரபாகக் காணப்படுகின்றது.

மனிதர்களால் பண ரீதியான, பொருள் ரீதியான உதவிகளை வழங்க முடியாவிட்டாலும் கூட, சரீர ரீதியான உதவிகளையாவது வழங்குகின்ற பொழுது அது ஏனையவர்களின் துயரங்களைக் களைய வழிவகுக்கும்.

மிகப் பெரிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை அவசியம் இல்லை. கர்ணனைப் போல கொடை செய்ய வேண்டும் என்ற நியதியும் இல்லை. சாதாரணமாக , மேலதிகமாக வீடுகளில் தயாரிக்கப்படுகின்ற மீதமான உணவுகளை இல்லாத ஏழை மக்களுக்குக் கொடுப்பதுவும், தனிமையில் வாழுகின்ற நபர்களுடன் மனம் விட்டு அளவளாவுவதுவும் கூட ஒரு விதமான கருணையாகவும், கொடையாகவும் கருதப்படும்.

எமது நாடான ஸ்ரீலங்காவில் மிகவும் பழமை வாய்ந்த தொண்டு நிறுவனமாகக் கருதப்படுவது “Colombo Friend-in-Need Society” (CFINS) என்பதாகும். இலங்கை காலனித்துவ ஆட்சியினரின் காலத்தில் இருந்த பொழுது, 1831ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் சர் எட்வர்ட் பார்ன்ஸ் அவர்களின் அனுசரணையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்தச் சங்கம், தற்போது இலங்கை மக்களுக்கு 191 ஆண்டுகளுக்கும் மேலான சேவையை செய்து வருகின்றது.

1840ஆம் ஆண்டு தனது முதலாவது மருத்துவ வசதியினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இந்த நிறுவனம், அதனைத் தொடர்ந்து 1850ஆம் ஆண்டுகளில் மத்திய காலப்பகுதியில் இலங்கையின் அனேகமான பகுதிகளில் தனது சேவையினை விஸ்தரித்தது.

விபத்து, வெடிகுண்டு, கண்ணிவெடி, நீரிழிவு நோய், புற்றுநோய் போன்ற பல்வேறு நோய்களினால் தமது கால்களை இழந்த மக்களுக்குச் செயற்கை ரீதியிலான கால்களை வழங்குகின்ற ஒரு தொண்டு நிறுவனமாக இந்த நிறுவனம் தனது பணியை செவ்வனே நடாத்திச் செல்கின்றது.

செயற்கை ரீதியிலான கால்கள், சுய வேலைவாய்ப்பு திட்டங்கள் போன்றவற்றை மாத்திரமல்லாது, நாட்டின் மிகப் பின்தங்கிய கிராமங்களுக்கு நடமாடும் சேவையின் மூலமாக சிறந்த சுகாதாரப் பணிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருவதனைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எம்மால் முடிந்த ஏதாவது ஒரு சிறிய உதவியையாயினும் மிகவும் வறிய, எளிய மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற உன்னதமான உணர்வுடன் இன்றைய நாளை (செப்டெம்பர் 05) ஆரம்பிப்போம்.



# நான் பார்த்த நல்லூர்



கனேஸ்குமார் மதியந்தி,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



நேரம் ஆகிட்டு சீக்கிரம் வா... கந்தனை பார்க்க வேண்டும். அம்மா எனக்கு பொம்மை வாங்கித் தர வேண்டும்... வா இன்று எப்படியாவது இப்பொருளை குறைந்த விலையிலாவது விற்று விட வேண்டும்... கடவுளே ஐயா... அம்மா கால் இல்லை பசிக்குது என பலவிதமான குரல்கள் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதை கேட்டிருப்பீர்கள்.

09.08.2024 கொடியேற்றத்துடன் ஆரம்பமான நல்லூர் திருவிழா நிறைவு கட்டத்தினை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

பல கோடி பக்த அடியார்கள் எப்படியாவது கந்தனை தரிசித்து விட வேண்டும் என கோயிலே கதி என்று இருப்பதையும் காணமுடிகின்றது அந்த வகையில், நான் பார்த்த நல்லூர் என் கையில் இருளும் அழகானது என்பதை காட்டும் வகையில் பலவிதமான வண்ண நிறங்களாலான மின் குமிழ்கள் நல்லூரரையே அலங்கரித்ததுடன், நல்லூர் செல்லும் வழி எல்லாம் பலவிதமான அலங்காரங்களைக் கொண்டு பக்த அடியார்களை வரவேற்றதுடன், நல்லூர் வாசலில் கால் வைத்தால் மட்டுமே போதும் நாம் நடக்காமலே கந்தன் காலடிக்கு சென்று விடலாம் அந்த அளவுக்கு பக்தர் கூட்டம் குழுமி இருப்பதை பார்க்க முடியும். வாகன நெரிசலானது பாதையையே மறைக்கும் அளவுக்கு காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. கந்தனை பார்த்து விட மாட்டோமா என வெளிநாடுகளில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் வருகின்ற பக்த அடியார்கள் புகைப்படங்களை எடுப்பதற்கு அல்லல் படுவதனை ஏராளமாக காண முடிந்தது. அதுமட்டுமல்லாமல், சைவ சமயத்தவர்கள் மாத்திரமல்லாமல் ஏனைய மதசாரரும்தரிசனத்தை பார்க்க வந்திருப்பதனை அவதானிக்க முடிந்தது.

இன்றைய நவீன உலகில் தொழிலை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் மானுடர்களுக்கிடையில் சமூகமயமாக்கல் என்பது அரிதாகிக்கொண்ட வருகின்ற தருவாயில், அதனை தக்க வைத்துக் கொள்வதற்கு நல்லூர் திருவிழா நல்லதொரு வாய்ப்பு. குடும்பமாக வந்து நல்லூர் கந்தனை வழிபடுவதோடு, நின்று விடாது, கோயில் வளாகத்தினை சுற்றி குடும்பமாக அமர்ந்து கலந்துரையாடல் செய்வதனையும் கடைகளுக்கு சென்று பொருட்கள் வாங்குவதாக இருக்கலாம், ஒன்றாக இருந்து உணவு உண்பதாக இருக்கலாம் இப்படியான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்த சிறார்கள் பலரது கனவை இத்திருவிழா நனவாக்கி இருக்கும் என நினைக்கின்றேன்.

இப்படியான இந்நல்லூர் திருவிழாவில் தரிசனம் பெற வந்த பக்த அடியார்களின் நேர்த்தி வேண்டுதல் நிறைவேறி இருக்குமோ இல்லையோ என்று தெரியாது, ஆனால், பல வியாபாரிகளினுடைய பிரார்த்தனை நிறைவேறி இருக்கும் உண்ண உணவு இல்லாமல் பசியால் வாடிக் கொண்டிருக்கும் பல உயிர்களுக்கு சோறு கிடைத்திருக்கும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. நான் பார்த்த நல்லூரில் பலதரப்பட்ட மனிதர்களை சந்திக்க முடிந்தது. ஒரு பக்கத்தில் எவ்வளவு விலையாக இருந்தாலும், ஆசைப்பட்டதை வாங்கி விட வேண்டும் என்றும் இன்னொரு புறம் தன்னுடைய குழந்தையினுடைய ஆசையினை நிறைவேற்ற முடியாமல் உள்ளேனே என்றும் என்னுடைய கடையில் உள்ள பொருட்களை வாங்க மாட்டார்களா என்று ஒரு பக்கமும் என்னை மதித்து எனக்கு ஒரு பத்து ரூபா தந்து என்னுடைய வயிற்றுப் பசியை போக்க மாட்டார்களா என்று கையை நீட்டி ஏக்கத்துடன் பார்ப்பவர்கள் என பல சிந்தனையோட்டங்களை கொண்ட மானுடர்களை என் கண் பார்வையிட்டது.

இது இவ்வாறு இருக்க இத்திருவிழா பல வியாபாரிகளுக்கு நன்மையாக அமைந்ததோடு, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஒரு வகையில் தொழில் துறையினை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களையும் அமைத்து தந்தது உதாரணமாக சக்தி அலைவரிசையினால் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஆரம்பகாலங்களில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப இயந்திரங்களை காட்சிப்படுத்தி அவற்றினை பற்றிய விளக்கம் கொடுத்து வந்திருந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இதன் மூலம் ஒரு பக்கம் ஆரம்பகால ஊடக தொழில்நுட்பத்தினை பற்றி தெரிந்து கொள்ள முடிந்ததோடு, மறுபக்கத்தில் தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்வதற்கு களமமைத்து தந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல், கோயிலை சுற்றி பொருத்தப்பட்டுள்ள ஒலிவாங்கியிலிருந்து வரக்கூடிய ஓசையை மிகத் தொலைவில் இருந்தும் தெளிவாக கேடகக்கூடிய அளவுக்கு பிரம்மிப்பாக அமைந்தது. பொருட்களை விற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வியாபாரிகளின் ஓசைகளும் ஏராளம் என்றே குறிப்பிட்டாக வேண்டும். பக்த அடியார்கள் பலரும் "கந்தனுக்கு அரோகரா" என கூறிக்கொண்டு இறைவனை காண வேண்டும் என்ற துதியில் எதனையும் பொருட்படுத்தாமல் செயல்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

ஆனாலும், என்னுடைய மனதில் ஒரு கேள்வி. இப்படியான பல கோடி மக்கள் கூடி இருக்கும் திருவிழாவில் பக்த அடியார்கள் கடவுளுக்கு அருகில் சென்று இரதத்தின் கயிற்றினை பிடிப்பதையோ அல்லது பூஜைக்கு முன்னால் நிற்பதையோ அவதானிப்பது அரிதாகவே இருக்கின்றது. ஏன் அனைவரும் கயிற்றினை பிடிக்கவில்லை? என்ற கேள்வி என்னுள் ஒரு பக்கம் எழ ஏதோ ஒரு விதமான கட்டமைப்பினை கொண்டு இயங்குவதனால் தான் முறையாக வழிபாடு இடம் பெறுகின்றது. இல்லை என்றால் நான் தான் பிடிக்க வேண்டும் என்று ஒரு கலவரம் தான் எழுந்திருக்கும்.

அதனால் தான் இப்படி இருக்குமோ என்னவோ என்று மறுபக்கம் எனது மனமானது பதிலும் கூடறியது. உண்மையில் நான் அனுபவிக்காத இதுவரையும் பார்க்காத பல காட்சிகளை இந்த நல்லூர் திருவிழா என் மனக்கண்ணிற்கு காண்பித்தது வாழ்வில் ஒவ்வொரு காட்சியும் பலவிதமான அனுபவத்தை தர முடியும் என்பதை என்னால் உணர முடிந்தது. நான் பார்த்த நல்லூரில் விலை மதிக்க முடியாத பல அனுபவங்கள் என் மனதில் ஆழப் பதிந்து விட்டது என்றே கூற வேண்டும்.

மானுடனில் பல வகை உண்டு. ஆகவே, மனிதன் மனிதனாக வாழவும் வாழ்க்கையில் முன்னேறவும் கடவுளை மாத்திரம் நம்பாமல் தன்னுடைய சுய முயற்சியிலும் அக்கறை கொண்டு முன்னேறி செல்லும்போது, நிச்சயம் வாழ்வு செழிப்பானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வான்உறற்யும் தெய்வத்துள் வைக்கப் படும்"



# தொலைந்துபோன மனிதன்



அகரா

தெருவோரம் நின்று தெருவை வாய்பார்ப்பதில் எனக்கு எப்போதும் ஒரு அலாதிப்பிரியமுண்டு. வீதியில் பயணிக்கும் ஒவ்வொருவரும் வேறு வேறு தேவைகளோடும் நோக்கங்களோடும் நகர்ந்து கொண்டிருப்பதை நின்று ரசிப்பதில் அப்படியொரு இன்பம். பெருந்தெரு ஒன்றினருகில் மாடி வீடு கட்டி மாடியில் நின்று தெருவை ரசிக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று. எந்தவொரு நீண்டதூரப் பயணத்தின்போதும் அருகிலிருப்பவருடன் பேசிக் தொண்டிருப்பதையோ தொலைபேசியை நோண்டிக் கொண்டிருப்பதையோ விட ஜன்னலோர இருக்கையிலமர்ந்து தெருவை ரசிப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

அப்படியொரு பயண நாள்தான் அது. இலங்கையின் பரபரப்பாய் இயங்கிக்கொண்டிக்கும் நகரங்களிலொன்றிற்குச் சென்றிருந்தேன். வழமைபோல் பெருந்தெருக்களையும் கடைத்தொகுதிகளையும் வாகனங்களையும் பார்த்துக்கொண்டே வீதியோரமாக நடந்து கொண்டிருந்த என் கண்கள், திடீரென ஓர் இடத்தில் நிலை கொண்டன. நின்று மீண்டும் திரும்பி பார்த்து உண்மைதானா என யோசித்தேன். என் கண்கள் கண்டுகொண்ட அந்த முகம் நான் எப்போதோ கண்ட ஒரு முகம்தான் என்று தோன்றியது. இல்லை இருக்காது. அந்த மனிதருக்கும் இந்தத் தோற்றத்திற்கும் சம்மந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அருகில் சென்று உறுதி செய்ய மனம் துடித்தது. சென்றேன். ஏன் இல்லை! அது அவரேதான். நிச்சயமாக அந்த நபர்தான். கண்டு பல வருடங்களாகி விட்டது. ஆனாலும், அவர்தான் என்று என்னால் உறுதிசெய்ய முடிந்தது. அதிக காலம் பழகாவிட்டாலும், பழகிய கொஞ்சக்காலத்திலேயே என் மனதில் பதிந்த அந்த நபர் என்னுடைய நெருங்கிய உறவினர். பேரும் புகழும் ஈட்டித்தரும் தொழில் எதுவும் செய்யாவிட்டாலும் செய்யும் தொழில் எதுவாகவிருந்தாலும் நேர்மையாகப் பிழையின்றி செய்து முடிக்கும் ஒருவர். எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருப்பவர். "எப்பிடியெல்லாம் இருந்த பெடியன், "அந்தக்காலத்தில நல்லா உழைச்சவன், கூலி வேலை செய்தாலும் றங்குப்பெட்டியில காசு சேத்து வச்சிருந்தவன், கொஞ்சம் நப்பிதான் ஆனா ஒரு குளப்படியும் இல்லாதவன், இப்ப எங்க என்ன செய்யிறானோ தெரியேல" இப்படி அம்மா கூட ஒரு தடவை சொல்லியிருக்கிறார்.

இளவயதில் வந்த காதல் சாதி மதம் பார்க்கவில்லை. காதலித்த பெண்ணை எப்படியேனும் மணந்துகொள்ள விரும்பியவர் சிறுவயதிலேயே பெற்றோரை எதிர்த்து திருமணம் செய்துகொண்டார். பின்னர் யாழ்ப்பாணத்திலே இந்திய இராணுவ பிரச்சினை ஆரம்பித்த காலத்திலே தன்னையும் மனைவியையும் காப்பாற்றிக்கொள்ள வன்னிக்கு இடம் பெயர்ந்து சென்றிருந்தார். காதல் மனைவியோடு மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருந்தார். பின்நாட்களில் வன்னியிலே ஈழப் போராட்ட இயக்கத்தின் அலுவலகம் ஒன்றிலே முக்கிய பதவி ஒன்று வகித்தவர்தான் இப்போது நான் இந்தக்கோலத்தில் கண்டுகொண்ட மனிதர்.

மனைவியின் கர்பகாலத்தில் கூடவேயிருந்து கவனித்துக் கொண்டவர். எதிர்காலம் பற்றிய பல கனவுகளுடனே குழந்தைப் பேற்றிற்காய் மனைவியை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு வைத்தியசாலைக்கு வெளியே காத்திருந்தவருக்கு மனைவியின் இறப்புச் செய்திதான் கிடைத்தது. கையிலே குழந்தையைக் கொடுத்த தாதி தாயாரைக் காப்பாற்ற முடியவில்லை என்று வருத்தத்தோடு சொல்லிச் செல்ல தன் முகத்தைப் பார்த்துக்கொண்டே சிவந்த பிஞ்சுக்கரங்களையும் கால்களையும் உதைத்து அழுதுகொண்டிருந்த பெண் பிள்ளையைப் பார்த்து மகிழ்வதா, இல்லை குழந்தையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது என்ற செய்தியைக் கேட்டு இறந்துபோன மனைவியைப்பார்த்து அழுவதா என்று கூடப் புரியவில்லை. உறவினர்கள் யாருமில்லாததால் இறந்த மனைவியின் உடலைத் தகனம் செய்யும் பொறுப்பை வைத்தியசாலையே ஏற்க குழந்தையோடு செய்வதறியாது புறப்பட்டவருக்கு இடப்பெயர்வு தந்த வரமாய் அண்ணன் குடும்பம் வன்னிக்கு வந்து சேர்ந்தது. ஏற்கனவே மூன்று பெண்பிள்ளைகளைக் கொண்ட அண்ணி நான்காவது பெண் பிள்ளையையும் மகிழ்வாக ஏற்றுக்கொள்ள காலம் சுழன்றது. அதிகரித்த மலேரியாத் தொற்று அண்ணியை வைத்தியசாலையில் படுக்கை போட்டது. அண்ணன் வேலைக்குச் செல்ல குழந்தையைப் பார்த்துக்கொள்ளுமளவுக்கு வயதோ பக்குவமோ இல்லாத அண்ணனின் பிள்ளைகள் ஒருபுறம், பசியால் வீறிட்டு அழும் அவர் குழந்தை மற்றொரு புறம். பசியால் துடித்த குழந்தைக்குப் பாலைப் போத்தலில் விட்டு வாய்க்குள் வைக்க அது திமிறிப் புரண்டு கால் கைகளை அடித்துக் கொண்டழுதது. மூச்சுமுட்டி அந்தரித்த குழந்தையோடு அருகிலிருந்த வீடொன்றை அடைந்தார். அவர்கள் எவ்வளவோ சமாளித்தும் அடங்காத குழந்தையின் அழுகை சளி அடைத்து உயிரை நிறுத்திக்கொண்டது. வாழவேண்டிய வயது தந்த தாங்க இயலாத வலிகளோடு துடித்த அந்த மனிதர்தான் இப்போது இங்கே கையிலிருக்கும் ஒருதுண்டு பாணைத் தெருநாய்களுக்குப் பிய்த்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்.

வருடங்கள் கழிந்தது. இளவயதுத் தோற்றம் மாறி சற்று மிடுக்கான தோற்றம் கிடைத்தது. மனைவியும் குழந்தையும் இறந்த வலி மனதின் ஓரத்திலிருந்து இன்னும் வலித்தது. இன்னொரு வாழ்வை எதிர்பார்க்காதவருக்கு வன்னிக்கு வந்து சேர்ந்த சில உறவினர்கள் மீண்டும் திருமணம் செய்துகொள் எல்லாம் சரியாகும் என்று ஆறுதலளித்தனர். வயது இளமைப் பருவத்தை தாண்டியிருந்தது. ஏற்கெனவே வாழ்வை இழந்து விட்ட எனக்கு இனி எதற்குத் திருமணம்? நான் இப்படியே இருந்துவிட்டுப்போகிறேன்... என்று மறுத்தார். சிறுவயதுக் காதல், குடும்பத்தை எதிர்த்துத் திருமணம், ஆனால், அது நாட்டுச் சூழ்நிலையால் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை. இடப்பெயர்வு, மனைவி பிள்ளையின் தொடர்ச்சியான இழப்பு இவையெல்லாம் ஒரு ஆணுக்கு நடந்து முடிந்து வாழ்வை வெறுக்கவேண்டிய வயதில்லை இது. என்ன செய்வது விதி அப்படி ஆகிவிட்டது. அதற்காக அப்படியே இருந்துவிட முடியுமா? மறுக்காமல் சம்மதித்துவிடு வாழ்க்கை மாறும் என பல அறிவுரைகளோடு, மறு திருமண ஏற்பாடு நடந்தேறியது. ஏற்கெனவே திருமணமாகி இரண்டு பிள்ளைகளோடு கணவனைப் போராட்டத்தில் இழந்த பெண் ஒருவர் இந்த மனிதருக்கு மனைவியாக்கப்பட்டாள். இவர்களுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தை "அப்பா" என அழைத்தபோது வாழ்வின் வலி அத்தனையும் தொலைந்தது. பிள்ளையே உலகமாய் நாட்கள் நகர்ந்தன.

தன் வாழ்வில் விதி மீண்டும் ஒரு தாண்டவமாடும் என்று அவர் ஒரு போதும் எண்ணவில்லை. ஆனால், நினைப்பது எல்லாம் நடப்பதில்லையே. நாட்டில் இறுதி யுத்த காலம் அது. போருக்குள் குடும்பத்தைத் தவற விட்டவர் அநாதையாக புனர்வாழ்வு முகாமிற்குள் புகுந்து கொண்டார். மனைவி, பிள்ளைகள் கடைசிவரை கிடைக்கவில்லை. தேடித்தேடி தன்னையே தன்னிடம் தொலைத்து விட்டவர்தான் இவ்வாறு வீதியோரமாய் மெலிந்த குள்ளமான தோற்றத்தோடு, ஒற்றைக்காலை இழுத்தபடி ஒரு துண்டுச் சாரம் மட்டும் அணிந்துகொண்டு தோளிலே ஒரு துணிப்பையுடன் நடந்து செல்கிறார். ஆம்! அது அவரே தான். என்னால் நிச்சயமாக அடையாளம் காண முடியும். எனக்கு நன்றாகத் தெரிந்த முகம்.

புனர்வாழ்வில் இருந்தபோது தகவல் கிடைத்தது. பின்னர் எங்களூருக்கு வந்து சேர்ந்தார். முன்புபோல் பெரிதாக எதுவும் பேசிக்கொள்ளவில்லை. எப்போதும் வெறுமையான அமைதியான முகம்.புதிதாக எந்தவொரு தொழிலையும் செய்வதற்கான ஆர்வம் இருக்கவில்லை. மூன்று வேளை உணவுகூடத் தேவைப்படவில்லை. சாதாரணமாகப் பேசிச் சிரித்து மகிழ முடியவில்லை. வானொலி, தொலைக்காட்சி, கைத்தொலைபேசி ஏன் பத்திரிகையேனும் தேவைப்படவில்லை. கதை கேட்பவர்களைக் கண்டாலே பிடிக்கவில்லை. தனிமையே அதிகம் வசதியாயிருந்தது. கொஞ்சம் மதுவும் தேவைப்பட்டது. ஏன்? எதற்கு? எதுவுமே புரியாத வாழ்வு அவரை அங்கிருந்து காணாமலாக்கி இப்போது ஒன்பது வருடங்களாகி விட்டது. தொலைந்து போனவரை அவருடைய அண்ணன் மட்டுமே தன் முதிர்ந்த வயதிலும் இன்றுவரை தேடிக்கொண்டிருக்கிறார். இப்போது வீதிகளில் அலைந்து திரிபவர் என்னிடமும் வந்து சில்லறைகள் நிறைந்த கையை நீட்டுகிறார்.

உக்ரைன்

### உக்ரைன் மீதான ரஷ்ய ஏவுகணை தாக்குதலில்

# 49 பேர் பலி

உக்ரைன் மீது ரஷ்யா, பொலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில், 49 பேர் உயிழந்துள்ளனர். 210க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இது குறித்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

“பொல்டாவாவில் ரஷ்ய தாக்குதல் குறித்த தகவல்களை பெற்றேன். இத்தாக்குதலில் ரஷ்யா இரண்டு பொலிஸ்டிக் ஏவுகணையை பயன்படுத்தியுள்ளது. கல்வி நிலையம் மற்றும் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தி, அந்நிறுவனங்களின் பகுதியளவை அழித்துள்ளது. இடிபாடுகளுக்கு அடியில் மக்கள் சிக்கிக் கொண்டனர். பலர் மீட்கப்பட்டனர், ஆனால் 180க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். துரதிர்ஷ்டவசமாக, பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.



இந்த தாக்குதலுக்கு ரஷ்யா நிச்சயம் பதில் சொல்லும். இந்த பயங்கரவாதத்தை தடுக்கும் திறன் கொண்ட அனைத்து நாடுகளையும் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். உக்ரைனுக்கு இப்போது வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ஏவுகணைகள் தேவை” என குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலுக்கு பின்னர் தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து வருகின்றன. இறப்பு எண்ணிக்கை தற்போது வரை 49ஐ எட்டியுள்ளன. தொடர்ந்து அதிகரிக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

சியோல்

### கடமையை செய்யத் தவறினால்

# மரண தண்டனை



வட கொரியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி சுமார் 1,000 பேர் உயிரிழந்த நிலையில், இதனை தடுக்க நடவடிக்கை எடுக்காமல், கடமை தவறிய குற்றத்திற்காக 30 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் கடும் மழை காரணமாக வடகொரியாவின் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டதுடன், மண்சரிவும் ஏற்பட்டது. இதனால், பலர் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்தனர். 1,000 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், வெள்ளம் மற்றும் மண்சரிவை தடுக்க அதிகாரிகள் தவறிவிட்டதாக கூறி அவர்களுக்கு மரணத் தண்டனை நிறைவேற்றும்படி அந்நாட்டு ஜனாதிபதி கிம்ஜாங் உன் உத்தரவிட்டார்.

இதனையடுத்து, உயரதிகாரிகள் உட்பட 30 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜோகன்ஸ்பர்க்

# உலகின் வயதான முதலை

உலகின் மிக வயதான முதலை என, ‘ஹென்றி’ எனும் பெயர் கொண்ட ஆபிரிக்க முதலை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த உலகில் பல உயிரினங்கள் வாழ்ந்தாலும் பழைமையான உயிரினமாக கருதப்படுவது முதலை. அப்படிப்பட்ட ஒரு முதலைக்கு தற்போது வயது 123 ஆகிறது. அதன் பெயர் ஹென்றி. உலகின் மிக வயதான முதலையாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் மட்டும் 5 மீட்டர், எடை ஒரு டன் ஆகும்.

கிட்டத்தட்ட 1,000 கிலோ எடையுடன் 16 அடி உயரம் கொண்ட இது, 6 மனைவிகளுடன் 10,000க்கும் மேற்பட்ட குட்டி முதலைகளை ஈன்று சாதனை படைத்துள்ளது. மேலும் இது, மனிதனை உண்ணும் நைல் இனத்தைச் சேர்ந்தது.



ஆபிரிக்க நாடான போட்ஸ்வானாவில் 1900 டிசம்பர் 16ஆம் திகதி பிறந்த இதற்கு, ஹென்றி எனும் பெயர் வருவதற்கான காரணம் கூறப்படுகின்றது.

அதாவது, 1900களில் போட்ஸ்வானா பழங்குடியினர் பகுதியில் மனித வேட்டையாடிய இந்த முதலையை பிடிக்க ஊர்மக்கள் முடிவு செய்தனர்.

கொல்கத்தா

### பாலியல் குற்றவாளிகளுக்கு

# மரண தண்டனை




பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்க வகை செய்யும் மசோதா, மேற்கு வங்க சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.

கொல்கத்தா ஆர்.ஜி.கர். மருத்துவமனையில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட விவகாரம் நாடு தழுவிய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து, மருத்துவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து, பாலியல் வன்கொடுமை சம்பவங்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

இந்நிலையில், பாலியல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பதற்கான மசோதாவை நிறைவேற்ற ஏதுவாக 2 நாள் சிறப்பு சட்டப்பேரவை கூட்டத்துக்கு ஆளும் திரிணமூல் காங்கிரஸ் அரசு அழைப்பு விடுத்தது. இதன்போது, பாலியல் குற்றத்திற்கு அபராஜிதா மசோதாவை மேற்கு வங்க சட்ட அமைச்சர் மோலோய் கட்டக் சட்டப்பேரவையில் அறிமுகம் செய்தார். இதைத்தொடர்ந்து, அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்த நிலையில், மசோதா ஒருமனதாக நிறைவேறியது.




பெங்களூர்

# டெங்கு தொற்றுநோய்

### அறிவித்தது கர்நாடகா

டெங்கு பரவலை கட்டுப்படுத்தும் வகையில், டெங்குவை தொற்று நோயாக, கர்நாடக அரசு அறிவித்துள்ள நிலையில், சுகாதாரத்தை பேணாதவர்களிடம் அபராதம் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் கடந்த இரண்டு மாதங்களாக, டெங்கு பரவல் அதிகரித்து வருகிறது. சுகாதார துறை கொடுத்த தகவலின்படி, ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கடந்த 3ஆம் திகதி வரை மாநிலத்தில் 25,589 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 181 பேருக்கு, பாதிப்பு உறுதியாகி உள்ளது.

இந்நிலையில், தொடர்ந்து பாதிப்பு அதிகரிப்பதால், டெங்குவை கட்டுப்படுத்துவதற்காக, தொற்று நோயாக மாநில அரசு அறிவித்தது. இதுகுறித்து சுகாதார அமைச்சர் தினேஷ் குண்டுராவ் தெரிவிக்கையில், “மாநிலத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்த, சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றனர். முன் எச்சரிக்கையுடன் இருக்கும்படி, மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தோம். ஆனாலும் சில இடங்களில், சுகாதாரத்தை பேண மக்கள் முயற்சி எடுக்கவில்லை. பாதிப்பு ஏற்ற, இறக்கமாக உள்ளது. பரவலை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில், டெங்குவை தொற்று நோயாக அரசு அறிவித்துள்ளது” என்று கூறினார்.



### பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் அசித பெர்னாண்டோ

# முன்னேறினார்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் எட்டாமிடத்துக்கு இலங்கையின் அசித பெர்ணாண்டோ முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதையடுத்தே அசித 17ஆம் இடத்திலிருந்து ஒன்பது இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவிச்சந்திரன் அஷ்வின், 2.ஜொஷ் ஹேசில்வூட், ஜஸ்பிரிட் பும்ரா, 4.பற் கமின்ஸ், 5. ககிஸோ றபாடா, 6.நேதன் லையன், 7.இரவீந்திர ஜடேஜா, 8.அசித பெர்ணாண்டோ, 9.கைல் ஜேமிஸன், 10. மற் ஹென்றி.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஜோ றூட், 2.கேன் வில்லியம்சன், 3.டரைல் மிற்செல், 4.ஸ்டீவன் ஸ்மித், 5.ஹரி ப்ரூக், 6.றோஹித் ஷர்மா, 7.யஷஸ்வி ஜைஸ்வால், 8.விராட் கோலி, 9.உஸ்மான் கவாஜா, 10.மொஹமட் றிஸ்வான்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவீந்திர ஜடேஜா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட், 5.ஜேஸன் ஹோல்டர்.

இதேவேளை தென்னாபிரிக்காவுக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் 35 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்தியத் தீவுகளின் நிக்கலஸ் பூரான், ஒன்பதாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ட்ரெவிஸ் ஹெட், 2.சூரியகுமார் யாதவ், 3.பில் ஸோல்ட், 4.யஷஸ்வி ஜைஸ்வால், 5.பாபர் அஸாம், 6.மொஹமட் றிஸ்வான், 7.ஜொஸ் பட்லர், 8. நிக்கலஸ் பூரான், 9.ருத்துராஜ் கைகவாட், 10.ஏய்டன் மார்க்ரம்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.அகீல் ஹொஸைன், 3.ரஷீட் கான், 4.குடகேஷ் மோட்டி, 5.வனிது ஹசரங்க, 6.ஜொஷ் ஹேசில்வூட், 7.அன்றிச் நொர்கியா, 8.அடம் ஸாம்பா, 9.பஸல்ஹக் பரூக்கி, 10.மகேஷ் தீக்‌ஷன.

முதல் 5 சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 2. சிகண்டர் ராசா, 3.ஷகிப் அல் ஹஸன், வனிது ஹசரங்க, 5.மொஹமட் நபி.



### சென்றல் காம்ப் விளையாட்டுக் கழகம் தொடர்:

# சம்பியனானது களுவாஞ்சிகுடி மக்ஸ்

**அஸ்ஹர் இப்றாஹிம்**

சென்றல் காம்ப் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்தாட்டத் தொடரில் களுவாஞ்சிகுடி மக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அணிக்கு 7 பேர், 5 ஓவர்கள் கொண்ட 64 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் ஈஸ்டர்ன் சலஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகிய மக்ஸ் சம்பியன் கிண்ணத்தையும் 40,000 ரூபாய் பணப்பரிசையும் தனதாக்கிக் கொண்டது.

# றோமா செல்லும் மற் ஹம்மெல்ஸ்

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் முன்னாள் பின்களவீரரான மற் ஹம்மெல்ஸை கைச்சாத்திடுவதை இத்தாலியக் கழகமான றோமா நெருங்கியுள்ளது.

றோமாவுடனான 35 வயதான ஹம்மெல்ஸின் ஒப்பந்தமானது 12 மாத ஒப்பந்தமாக இருக்குமெனக் கருதப்படுகிறது.

இதேவேளை, ஹம்மெல்ஸைக் கைச்சாத்திடுவது குறித்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டும் கருத்திற் கொள்வதாகக் கூறப்படுகிறது.



### இங்கிலாந்தின் புதிய

# பயிற்றுவிப்பாளர் மக்கலம்

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான இங்கிலாந்து ஆண்கள் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக பிரெண்டன் மக்கலம் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, ஏற்கென அவருக்குள்ள டெஸ்ட் போட்டிகளுக்கான தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியோடு இதிலும் கடமையாற்றவுள்ளார்.

புதிய மூன்றாண்டு ஒப்பந்தமொன்றுக்கு மக்கலம் இணங்கியுள்ளதோடு, அடுத்த உலகக் கிண்ணத் தொடர் வரையில் இங்கிலாந்து ஆண்கள் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றவுள்ளார்.



அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் தற்காலிக தலைமைப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றவுள்ள மார்க்கஸ் ட்ரெஸ்கொதிக், மேற்கிந்தியத் தீவுகளுக்கான சுற்றுப்பயணத்திலும் அதே பதவியிலும் தொடர, உத்தியோகபூர்வமாக 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தோடு அனைத்து வகையான போட்டிகளுக்கும் தலைமைப் பயிற்றுவிப்பாளராக மக்கலம் கடமையாற்றவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 05, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.